

## 2024 நாடாளுமன்றத் தேர்தல் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகளை சேகரித்து வருகிறார். அவரின் 2–வது கட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**30.03.2024, சனிக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | அண்ணா பேருந்து நிலையம் அருகில், மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் | காஞ்சிபுரம் |
| 2 | மதியம் 12.00 மணி | நான்கு முனை சிக்னல் சந்திப்பு, விழுப்புரம், விழுப்புரம் தெற்கு மாவட்டம். | விழுப்புரம் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 4.30 மணி | மணிக்கூண்டு சாலை, உளுந்தூர்ப்பேட்டை, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம். | விழுப்புரம் |
| 4 | மாலை 5.30 மணி | கடைவீதி, விருத்தாசலம், கடலூர் மேற்கு மாவட்டம். | கடலூர் |
| 5 | இரவு 7.00 மணி | நான்கு சாலை சந்திப்பு, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் | சிதம்பரம் |
| 6 | இரவு 8.00 மணி | கடைவீதி நான்கு முனை சந்திப்பு, காட்டுமன்னார்கோவில், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |

**31.03.2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | தெற்கு ரத வீதி, சிதம்பரம், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |
| 2 | காலை 11.30 மணி | சீமாட்டி சிக்னல், நான்கு முனை சந்திப்பு, கடலூர், கடலூர் கிழக்கு மாவட்டம் | கடலூர் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 4.30 மணி | வில்லியனூர் கிழக்கு மாட வீதி சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 4 | மாலை 5.30 மணி | மரப்பாலம் சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 5 | இரவு 6.30 மணி | அண்ணா சதுக்கம், புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |



**அன்பகம்**
சென்னை – 18.
நாள் : 27–03–2024.

கடலூர் காங். வேட்பாளர் டாக்டர் எம்.கே.விஷ்ணுபிரசாத்தை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விருத்தாசலத்தில் வாக்குச் சேகரிக்கிறார் !

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை!

கடலூர், மார்ச் 30 - கழக இளைஞரணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விருத்தாசலத்தில் பிரச்சா ரம் செய்வது தொடர்பாக மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் கடலூர் நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத்தை ஆதரித்து கழக இளைஞரணி செயலாளர்-விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் கடைவீதியில் இன்று (30.3.2024) சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் கைச்சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சாரம் செய்கிறார்.

அது சமயம் ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் மாவட்ட தலைவர்கள் மற்றும் கழக ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் தொ.மு.ச நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



தேனி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு தேனி நகரப் பகுதியில் நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் ஏற்பாட்டில் கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரித்தனர். உடன் சுரேஷ், பவுன்ராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வாணியம்பாடி வீ. சிவாஜிகணேசன்**
**மார்ச் 30 (2015)**



வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகரக் கழகச் செயலாளராக 25 ஆண்டுகள் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர்.

வாணியம்பாடி நகர்மன்ற உறுப்பினராக 10 ஆண்டுகளும்; வாணியம்பாடி நகர்மன்ற தலைவராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்நகர மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவராகவும், வாணியம்பாடி நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், தென்னக ரயில்வே துறை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகர தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் நாமக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மா. மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நகரச் செயலாளர்கள் ராணா ஆனந்த் , பூபதி, சிவக்குமார் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட 28 வது வார்டு பள்ளிவாசல் தெருவில் ‘இந்தியா’ கூட்டணி மதுரை நாடாளுமன்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசனை ஆதரித்து மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. பொதுமக்களிடையே வேன் பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், இளைஞரணி சௌந்தர்ராஜன் பவர் மணிகண்டன் மற்றும் திரளான கூட்டணி கட்சியினர், கழகத்தினர் கலந்து கொண்டனர்.